சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **01 / 2019**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **15.04.2025** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

பெயர் : ராமசாமி	கிராமம் :
த/பெ :	வட்டம் :
மதம் :	தொழில்:
ஜாதி :	வயது :

முதல் விசாரணை

நான் குளித்தலை வட்டார போக்குவரத்து கிளை அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி அனுமதி கடிதம் சா.சா.ஆ-3. குளித்தலை தாலுக்கா திருச்சி மெயின் ரோடு கருப்பண்ணன் மகன் குமார் என்பவருக்கு எங்களது அலுலவகத்தில் ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை. அவ்வாறு ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை என்பதற்காக கணினியின் நகல் - சா.சா.ஆ.4.

மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

எங்களது அலுவலகம் பகுதி அலுவலகம் என்றால் சரிதான். எங்களது அடுத்தகட்ட அலுவலகம் கரூரில் உள்ளது. மேற்படி முதல் விசாரணையில் சொன்ன நபருக்கு கரூர் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பதை ஆய்வு செய்தேனா என்றால் அவசியம் இல்லை. தற்காலிக முகவரியை வைத்துக்கொண்டு வேறு மாவட்டத்தில் ஓட்டுநர் உரிமை பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரிதான். ஆனால் அதற்கு படிவம் 14ன் மூலமாக ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் மூலமாக பெற்றுக்கொள்ளலாம், ஆனாலும் ஆதார் அட்டையின் அசலை

காண்பித்தும் தற்காலிக முகவரியை காண்பித்தும் ஓட்டுநர் உரிமம் பெற்றுக்கொள்ளலாம். முதல் விசாரணையில் சொன்ன நபருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.